www.tamilarangam.net

மேலாதிக்கத்திற்கெதிராக
முற்போக்குச் சக்திகளுடன்
ஒன்றிணைந்து

# மக்களின் விடுதலையை
# வென்றெடுப்போம்

தமிழீழ
மக்கள்
விடுதலைக்
கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> **தன் தலைவிதியை தனது சொந்தக் கரங்களில் எடுக்காத எந்த இனமும் உருப்படாது.**

Published by People's Liberation Organisation of Thamil Eelam, 46 Central Road, Worcester Park, Surrey KT4 8HY, UK
Printed by Grafton Litho Ltd (TU), 5b Old Town, London SW4 0JT

# அரசியல் நோக்கு

## வரலாற்றுப் பின்னணி

இலங்கையை நீண்ட நெடுங்காலமாகவே மேற்கு நாடுகள் 'சிலோன்' (CEYLON) என்றும்; கிரேக்கர்களும் ரோமர்களும் 'தப்ரபேன்' (TAPROBANE) என்றும் அறிந்திருக்கின்றனர்.

இலங்கை வரலாற்றில் அதிகமாகப் பேசப்படுகின்ற எல்லாளன் (சிங்களத்தில் எலரா) இத் தீவில் 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக சிங்களக் காலக் கணிப்பு நூல்கள் குறிப்பிடுகின்றன. (SINHALA CHRONOLOGIES)

கி. பி. 1350ம் கால கட்டத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் (LOW COUNTRY) யாழ்ப்பாண அரசு மேன்மையுற்றிருந்ததாக எச். டபிள்யூ. கொட்றிங்டன் (H.W. CODRINGTON) போன்ற வரலாற்று ஆசிரியர்கள் நிரூபித்துள்ளனர். இதற்கான சான்றுதாரமாக கேகாலை மாவட்டத்திலுள்ள கொட்டகம (KOTAGAMA) என்ற கிராமத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு இருக்கின்றது. 14ம் நூற்றாண்டில் 2ம், மூன்றும் கந்தாயங்களில் யாழ்ப்பாண ஆட்சி பெருமளவு பரந்திருந்ததாக (LAWRIE'S GAZETTEER VOLUME ii Page 581) குறிப்பிடுகின்றது.

1505 நவம்பர் 15ல் தான் போத்துக்கலைச் சேர்ந்த டொன்லொறன் கோ டி அல்மேய்டா (DON LOUREN CO DE ALMEIDA) வர்த்தக நோக்கைக்கொண்டு முதன் முதலாக இலங்கைக்கு வந்தார்.

1544 வரை யாழ்ப்பாண அரசு போத்துக்கேயரால் தொல்லைக்குட்படுத்தப்படவில்லை. போத்துக்கேய ஆளுனரான டொன். கொன்ஸ்ரான்டினோ டி பிறகன்சா (DON. CONSTANTINO DE BRAGANZA) குடா நாட்டின் மீது படையெடுத்து மன்னரைக் கைப்பற்றினலும் 1.92 வரை அவர்களால் யாழ்ப்பாணத்தை தமது ஆளுமையின் கீழ்க் கொண்டுவர முடியவில்லை. இக்கால கட்டத்தில் யாழ்ப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாணக் குடா நாட்டையாண்ட கடைசி தமிழ் மன்னன் சங்கிலியன் ஆவான்.

1656ம் ஆண்டு ஒல்லாந்தர் வந்து போத்துக்கேயரைத் துரத்தினர்.

1658ம் ஆண்டு மூன்று மாத முற்றுகையின் பின்னர் ஜூன் மாதம் 24ந் திகதி யாழ்ப்பாண அரசை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.

1796ம் ஆண்டு இலங்கையின் மீது படையெடுத்த ஆங்கிலேயர் முதலில் கரையோரப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். இக்கால கட்டத்தில் வன்னிப்பகுதியை ஆண்ட கடைசி மன்னன் பண்டார வன்னியன் என்னும் தமிழ் மன்னனாவான்.

இலங்கையின் கடைசி மன்னன் கண்டியில் இருந்து ஆட்சி புரிந்த ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் என்பவனே. இலங்கையை ஆண்ட கடைசிச் சிங்கள மன்னன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனே என்று பௌத்த பிக்குகளும், சிங்களத் தலைவர்களும் கூறிவருகின்றனர். ஆனால் அவன் ஒரு தமிழ் மன்னன் என்றே வரலாற்று ஆவணங்களும், சின்னங்களும் குறிப்பிடுகின்றன. அம்மன்னன் இந்தியாவில் இறந்தான். தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள வேலூர் என்ற கிராமத்தில் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனின் கல்லறை இன்றும் இருக்கின்றது. அம்மன்னனின் வாரிசுகளான தமிழர்கள் இன்றும் தமிழகத்தில் வாழுகின்றார்கள்.

1815ல் கண்டி அரசு வீழ்ச்சியடைந்த போதுதான் முழு இலங்கையும் முதன்முதலாக ஆங்கிலேயரின் அரசியற் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. எனினும் 1833வரை இலங்கையில் தனித்தனி அரசுகள் இருந்திருக்கின்றன. 1833க்குப் பின்னர் மூன்று தனித்தனி அரசுகளும் நிருவாக வசதிக்காக தமிழ், சிங்கள மக்களின் எதிர்ப்புக்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஒரே மாதிரியான மத்தியத்துவப் படுத்தப்பட்ட நிருவாக அமைப்பின் கீழ்க்கொண்டுவரப்பட்டது.



1819-ம் ஆண்டிலிருந்து பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக தென்னிந்தியாவில் இருந்து தமிழர்கள் அழைத்துவரப்பட்டு மலையகப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களின் மூதாதையோர் ஏறத்தாழ 150 ஆண்டுகளாக இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர்.

மறுக்கமுடியாத இந்த ஆதாரங்களெல்லாம் இலங்கையிலுள்ள தமிழர்கள் நினைவுக்கெட்டா காலந்தொட்டே அரசோச்சி வந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் ஒரு தனியான நாட்டினம் என்பதையும், சிங்களவர்களுடன் தமிழ் மக்களுக்கு எவ்வித நிருவாகத் தொடர்புகளும் நாட்டு மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இருந்ததில்லை என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றன.

1948 பெப்ரவரித் திங்கள் 4ந் திகதி இலங்கைக்கும் விடுதலை என்னும் பெயரில் அரசுரிமை கைமாற்றப்பட்டது. விடுதலை பெற்ற இலங்கையில் டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் முதன் முதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு ஏற்பட்டது. அந்த அரசு உடனடியாக மேற்கொண்ட முகாமையான நடவடிக்கைகளுள் சுமார் பத்து இலட்சம் மலையகத் தமிழரின் வாக்குரிமை, குடியுரிமை என்பவற்றைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியதுமல்லாது தமிழ்ப் பாரம்பரிய நிலங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றதும், அப்போது ஆட்சி மொழியாயிருந்த ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, சிங்களத்தையும், தமிழையும் ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்போவதாக சிங்கள அரசியல் தலைவர்கள் கூறினார்கள்.

ஆனால் ஆட்சிக்கு வந்த பின்பு அவ்வுறுதிமொழி நிறைவேற்றப்படாமல், தமிழ்ப்பேசும் மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்குவந்தமுதலாளித்துவக் கட்சிகள் தமிழை ஒரு—இரண்டாந்தர மொழி ஆக்கிவிட்டன. சிங்களமே ஆட்சி மொழியாகவும் ஆக்கப்பட்டது. கல்வி, வேலைவாய்ப்புகள், குடியேற்றம், புதிய தொழிற்சாலைகள், பயிர்ச்செய்கை, உயர்கல்வி போன்ற அனைத்துத் துறைகளிலும் தமிழர்கள் ஒதுக்கப்பட்டு வந்தனர்.

இதுவரை இலங்கையில் 1920, 1924, 1931, 1946, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் புதிய அரசியல் யாப்புகள் உருவாக்கப்பட்டன. இந்த அரசியல் யாப்புகள் எல்லாம் தமிழ் மக்களின் உரிமைகளைப் படிப்படியாக பறிப்பதற்கே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இலங்கையில் தமிழர்களை ஒழிப்பதற்கு இனவாதமே பெரிதும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. 1956, 1958, 1961, 1964, 1974, 1976, 1977 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளும், கலவரங்களும் சிங்களத் தலைவர்களினாலும், மதவாதிகளினாலும் தூண்டப்பட்டு, தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. 1981க்குப்பின்னர் தமிழ்மக்களைப் படுகொலை செய்வது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. ஜே. ஆர். ஜெயவர்தனாவின் மேலாதிக்க அடிவருடி அரசு, அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. 1977க்குப்பின்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமிழர்களை அழிக்கின்ற போர் பற்றி அடிக்கடி நாடாளுமன்றத்திலேயே பிரகடனப்படுத்தி வருகின்றார்.

இவ்விதமான தமிழர் விரோத அரசியல் நடவடிக்கைகள் உச்சமடைந்த காலகட்டத்தில்தான் இன, மத, மொழி, மாவட்ட, நாட்டு எல்லைகளையெல்லாம் கடந்து மக்களை நேசிக்கின்ற கருத்தியலை ஏற்றுக்கொண்டுள்ள நாங்கள் மக்களுக்கானதோர் மக்கள் அரசை நிறுவும் இலட்சியத்தோடு அரசியற் பிரவேசம் செய்தோம்.



## அரசியல் அறிக்கை

''நாங்கள் பிறவிப் புரட்சியாளர்களோ, பிறவி அரசியல் வாதிகளோ அல்லர்; எம்மக்களே எம்மைப் புரட்சியாளர்களாக ஆக்கியுள்ளார்கள்.''

எங்கள் இயக்கம் எம் நாட்டுச் சூழ்நிலைகளின் தேவைகளை ஒட்டி எழுந்த இயக்கமாகும். கடந்த பதினாறு ஆண்டு காலப்போராட்டத்தினாலும், செயலாற்றத்தினாலும் உருவான அநுபவங்களின் திரட்சியுடன் கூடிய பொதுவுடமைக் கொள்கையை உள்ளடக்கி தமிழ் மக்களின் வரலாற்றைப் 'புதிய பாதை'யில் முன்னெடுத்துச்செல்கின்றோம்.

1970ல் தோன்றிய தமிழ் மாணவர் பேரவை தமிழீழத்து மக்களின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை அமைத்தது. அதைத் தொடர்ந்து தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, இளைஞர் பேரவை, தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புகளில் இருந்த முற்போக்குச் சிந்தனைகொண்டவர்களும், ஏனைய முற்போக்குத்தாபனங்களில் இருந்து வந்தவர்களும் இணைந்து ''தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்'' தோற்றுவிக்கப் பெற்றது.

கடந்த காலங்களில் எமது கொள்கையை நடைமுறைப் படுத்தும் வகையில் நாம் மூன்று வகைகளில் பணியாற்றியுள்ளோம்.

(அ) தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்துடனும், காந்தியத்துடனும் இணைந்து பாதிக்கப்பட்ட மலையக தமிழ் மக்களை தமிழீழப்பகுதிகளில் குடியேற்றுவதில் வெற்றி கண்டுள்ளோம். வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் புதிய முறைப் பண்ணைகளை அமைத்து கிராம மக்களின் வாழ்க்கையில் வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(ஆ) தமிழீழ விடுதலைக் கழகத்தினூடாக நேரடி அரசியலில் இறங்கி தமிழீழ மக்களை விடுதலைப் போராட்டத்திற்கு கணிசமான அளவு அணி திரட்டி னோம். தமிழ்ப் பகுதிகள் பூராகவும் கிளைகள் அமைத்த தோடு மாணவர்கள், பெண்கள், விவசாயிகள், தொழி லாளர்கள், இளைஞர் அமைப்புக்களை உருவாக்கு கின்றோம்.

(இ) இராணுவத்துறையில் பல கெரில்லாத் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தியுள்ளோம். ஆனைக்கோட் டைக் காவல் நிலையத் தாக்குதல், குறிகாட்டுவான் இராணுவத் தாக்குதல் போன்ற பல தாக்குதல்களை வெற்றியுடன் செய்துள்ளோம். மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருந்த போராளிகளை சிறை மீட்ட தில் வெற்றி கண்டோம். அத்துடன் சிறிலங்கா இராணுவத்தை நேரடியாக எதிர்கொள்வதற்கு வேண்டிய பயிற்றப்பட்ட தமிழீழ மக்கள் படையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழீழ மக்களை விடுதலை பெற்ற ஒரு இனமாக்க அனைத்து ஆயத்தங்களையும் விரைந்து செய்து வருகின்றோம். எமது இயக்கமே எமது நாட்டின் ஒடுக்கப்பட்ட, சுரண்டப் படும் மக்களது ஆதார ஆற்றலாக நிலை பெற்று வளர்ந்து வருகின்றது.

## அரசியல் வரலாற்றுப் பின்னணி

தமிழீழ மக்களது முழு விடுதலையே எங்களது தலையாய நோக்கமாகும். தமிழ் மக்களும், நாடும் நீண்டகாலமாகப் பொருளாதாரம், கலாச்சாரம், மொழி, கல்வி, வேலை வாய்ப்பு, குடியேற்றம் போன்ற பல்வேறு துறைகளில் புறக் கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன. அரசு இயந்திரம் அனைத் திலும் தமிழ் தேசிய சிறுபான்மை மக்களை ஒடுக்கும் நடவடிக் கைகளுக்கு ஏற்றவகையில், அரசியற் தத்துவக் கோட்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது.



1948ல் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மலையகத்தமிழ ரின் குடியுரிமை, வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன. தமிழர் வாழ்ந்த பகுதிகளை பூகோள ரீதியில் அழிக்கும் நோக்கமாக கடந்த முப்பத்தாறு ஆண்டுகாலமாக அரசின் வரண்ட வலையக் குடியேற்றத் திட்டங்கள் தொடருகின்றன. இதன் பரிணாம வளர்ச்சி இன்று சிங்கள அரசின் துணையுடன் இனவாதக் குழுக்களால ஒழுங்கு செய்யப்பட்ட வன்முறைக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் மக்கள் தங்களது பாரம்பரியக் குடி நிலங்களில் இருந்து விரட்டப்படும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. 1956ல் நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் தமிழர்களின் வேலை வாய்ப்பைத் தடுத்து பொருளா தார ரீதியில் பின்னடைவு காணச் செய்யும் நோக்கிலேயே கொண்டு வரப்பட்டது.

கடந்த காலங்களில் நடைபெற்ற தமிழர்களுக்கெதிரான வன்முறை தமிழ் இன ஒடுக்கு முறையின் சில முகங்களாகும். இந்நிலையில் தமிழர்கள் தன்மானத்துடனும், விடுதலையுட னும் உரிமையுள்ள மக்களாக வாழ்வதற்கு தனி அரசு ஒன்றை அமைக்கப் போராடுவதைத்தவிர வேறு வழி கிடை யாது. அதுவே தமிழீழ மக்கள் சனநாயகக் குடியரசாகும்!

எங்கள் பிரதான நோக்கம் 'தமிழீழ மக்களது விடுதலை' என்னும்போது விடுதலைக் கொடியை பறக்கவிடுவது மட்டு மல்ல. அல்லது தாள்களில் எழுதிக்கேட்டு பெறுதலில் கருத்தாயிருத்தல் என்றும் கருதப்படமாட்டாது. விடுதலை என்பது சட்டரீதியான அரசியல் ஏற்பாடல்ல. எங்கள் மக்களது விடுதலை என்னும்போது அரசியல், சமுதாய, பொருளாதார விடுதலையையே குறிப்பிடுகின்றோம்.

நாம் ஒரு நீண்டகால மக்கள் போராட்டத்தை ஆரம் பித்துள்ளோம். பரந்துபட்ட மக்கள் போராட்டமாக இது நடைபெற வேண்டும் என்பதற்காகவேஇவ்வாறு கூறுகின் றோம். எமது போராளிகள் மக்களுக்காகப் போராடும் முன்னோடிகளாக இருத்தல் வேண்டும். கடந்த முப்பத்தாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண்டு காலமாக நடைபெற்ற அரசியல் பின்னடைவைப் பார்க்கும்போது, ஒரு நீண்டகால மக்கள் போராட்டமே போராட்ட உணர்வையும், பொதுவுடைமைச் சிந்தனையையும் வளர்க்கக்கூடியது என நாம் நம்புகின்றோம்.

பரந்துபட்ட மக்களின் கருவி ஏந்திய புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே தமிழீழத்திலுள்ள சிறிலங்கா ஆட்சியைத் தூக்கியெறிய முடியும். அதன் மூலமே மக்கள் ஆதரவு பெற்ற சனநாயகக் குடியரசை அமைத்திடமுடியும். இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கும் புரட்சிகர ஆற்றல்களே (SOCIALIST REVOLUTION) சமூகவுடைமைப் புரட்சியை முன்னெடுக்கும் வகையில் வளர்ந்து வரும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன விடுதலையை மட்டும் குறியாகக் கொண்டதல்ல. இன்று கூர்மையடைந்துள்ள முரண்பாடு இன முரண்பாடு என்பதில் நாம் வேறு கருத்துக்கொண்டவர்களல்ல. இவ்வின விடுதலைப்போராட்டம் சுரண்டும் வர்க்கத்திடமிருந்து விடுதலை பெறும் போராட்டத்தின் ஆரம்ப அடித்தளம் என்பதிலும், நாம் திடமாக இருக்கின்றோம். நாம் காண முயலும் நாட்டு விடுதலை வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தடையாக விளங்கக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கின்றோம். ஆகையினால்தான் நாம் காண விளையும் 'தமிழீழ மக்கள் சனநாயகக் குடியரசு' உழைக்கும் மக்களின் புரட்சிகரப் போராட்டத்தால் அமையவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

தமிழீழத்தைச் சார்ந்த பாராளுமன்ற அரசியற் கட்சிகள் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை, உடன்படிக்கைகள் ஏற்படுத்துவதனால் தமிழ் மக்களின் சிக்கல்களைத் தீர்க்கமுடியும் என நம்புகின்றார்கள். சிறிலங்கா அரசின் இனவாத குணும்சத்தைப் புரிந்து கொண்டவர்கள் தமிழ் மக்களின் சிககல் கருவிப்போராட்டம் ஒன்றினாலேயே தீர்க்க முடியும் என்பதில் தெளிவு கொள்வார்கள்.



தமிழ்ப் பாராளுமன்றத் தலைமைகள் நடத்திய திட்டமிடாத போராட்டங்களின் பலவீனத்தை சரிவரப்புரிந்து கொள்ள முடியாத சிலர் மக்கள் போராட்டத்தை நிராகரித்து கருவியேந்திய குழுக்களால் மட்டுமே தமிழீழ விடுதலையைப் பெறமுடியும் என நம்புகிறார்கள். இவ்வகையான தனி நபர் பயங்கரவாத நடவடிக்கைகள்மூலம் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டவோ, புரட்சிகரச் சக்திகளாக அவர்களை மாற்றியமைக்கவோ, கட்சிக்குள் சனநாயகத்தை உருவாக்கவோ முடியாது.

உழைக்கும் மக்களே புரட்சிகர விடுதலைப் போராட்டத்தை இறுதிவரை முன்னெடுக்க வல்லவர்கள். இது கொள்கை அடிப்படையில் மட்டுமின்றி நடைமுறை அனுபவ ரீதியிலும் நாம் கண்ட உண்மையாகும். உழைக்கும் மக்களே எமது புரட்சியின் முன்னோடிகள் என்னுமிடத்து எமது சமூகத்தின் அமைப்பையும், நாட்டு விடுதலை உணர்வின் ஆற்றலையும் நாம் மறந்துவிடவில்லை. நாம் தமிழீழ மக்களைப் புரட்சிகர உழைக்கும் மக்களின் தலைமையின் கீழ் ஒன்றுபடுத்த முனைகின்றோம். இப்போராட்டத்தில் சிந்தனையாளர்கள், சிறு முதலாளிகள், மாணவர்கள், உட்பட தேசிய உணர்வு கொண்ட அனைவருக்கும் பங்குண்டு.

## பன்னாட்டு உறவுகள்

தமிழீழ மக்களின் விடுதலையை நாம் தனியாகப் போராடி வென்றெடுக்க முடியாது. சிறிலங்காவில் உள்ள முரண்பாடுகளும் எமது போராட்டத்தை தீர்மானிக்கும் என்பது எமது முதன்மையான கருத்தாகும். சிங்கள இனவாத முதலாளித்துவ அரசுக்கெதிராக பரந்துபட்ட சிங்கள மக்களின் போராட்டத்தையும் நாம் ஆதரிக்கின்றோம். ஆயினும் எம்மையும், சிங்கள மக்களையும் இணைத்து சமூகவுடைமைப் புரட்சியை நடத்துவதாகக் கூறிய இடதுசாரிகள் நாடாளுமன்றப் பாதையையே காண்பித்தனர். இவர்களின் வழிகாட்டல்கள் மோசமான பின்னடைவுகளைத் தந்தது.

www.tamilarangam.net



இவர்களினால் சிங்களத் தொழிலாளர்களையும் பாதுகாக்க முடியவில்லை.

சிறிலங்காவில் நாடாளுமன்றத்திற்குப் புறம்பான புரட்சிகரப் போராளிகள் பலம் பெறும்போது அவர்களின் போராட்டத்திற்கு நாம் உதவுவோம். சிறிலங்காவில் ஏற்படும் சமூகவுடைமைப் புரட்சிக்கு தளப்பிரதேசமாக தமிழீழம் அமையும். விடுதலை பெற்ற சமூகவுடைமைத் தமிழீழத்திற்கு அருகே புரட்சிகர சமூகவுடைமை அரசு ஒன்று சிறிலங்காவில் அமைவது வரவேற்கத்தக்கதும், வரலாற்று நியதியும் ஆகும். எமது விடுதலை மேலாதிக்கங்கட்கு எதிரானதாகவே இருக்கும். மேலாதிக்கங்களின் பிடியில் சிக்கிக்கொள்ளாமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

இலங்கை பன்னாட்டு ஏகபோக முதலாளித்துவத்துடன் கட்டுப்பட்டு இருக்கின்றது. மேலாதிக்கங்கள் பிற்போக்கான சிறிலங்கா இனவாத அரசுக்கு கோடிக்கணக்கான டொலர் பணம் கொடுத்து அரசியல், பொருளாதார, தார்மீக ஆதரவு வழங்குகின்றது. ஆகவே நாம் மேலாதிக்க எதிர்ப்பாளர்களான உலக சமூகவுடைமை நாடுகளுடனும், நாட்டின் விடுதலை இயக்கங்களுடனும், முதலாளித்துவ நாடுகளில் உள்ள சனநாயகத் தொழிலாளர் அமைப்புகளுடனும், மேலாதிக்க எதிர்ப்பு நாடுகளுடனும் நேச உறவை ஏற்படுத்தி வருகின்றோம்.

## இலங்கைத் தீவில் வாழும் மக்கள் பற்றிய எமது நிலைப்பாடு

### சிங்கள மக்கள்

இத்தீவில் தமிழ், சிங்கள மக்கள் இணைந்து பிற்போக்கான மேலாதிக்கச் சார்பு சிங்கள இனவாத அரசை எதிர்த்துப் போராட முடியாமற்போனது ஒரு பேரிழப்பே. நாம் நடைமுறைக்கேற்ற வகையிலேயே, புரட்சிகரப் போரா



ட்டத்தை முன்னெடுக்கின்றோம். தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளை வெல்லுவதற்கும், தொடர்ந்து சமூகவுடைமைப் புரட்சிக்கான முன்னெடுப்புகளுக்கும் அடித்தளமாக அமையும். இதனை உணர்ந்துகொண்டு சிங்கள—உழைக்கும் மக்கள் தமிழீழ விடுதலைக்கு தமது ஆதரவை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். தமிழீழத்தில் வாழும் சிங்கள மக்கள் எத்தகைய பாகுபாட்டிற்கோ, இன ஒடுக்குமுறைகட்கோ உள்ளாக மாட்டார்கள். மொழி, மதம், கலாச்சாரம் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும் சிங்கள மக்களுக்கு தமிழீழத்தில் உரிமைகள் மறுக்கப்படமாட்டாது. சிறிலங்காவில் வாழும் சிங்கள மக்கள் மேலாதிக்க சார்பான சிங்கள இனவாத அரசை வீழ்த்தி, சமூகவுடைமை சமூகத்தை அமைப்பதற்கு நாம் நிபந்தனையற்ற ஆதரவை என்றும் நல்குவோம். சிறிலங்காவில்—வாழும் இசுலாமிய, மலையகத் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதும், அவர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்வதும் உழைக்கும் சிங்கள மக்களின் தலையாய கடமையாகும்.

### இசுலாமிய மக்கள்

இசுலாமிய மக்களின் தாய்மொழி தமிழாயினும், அவர்கள் இறுக்கமான மதம், பண்பாடு, போன்ற பண்புகளைக் கொண்டுள்ள சமூகமாக விளங்குகின்றார்கள். அனைத்துத் தமிழ் மக்களைப்போல் இசுலாமிய மக்களும்—சிங்கள இனவாத அரசின் ஒடுக்குமுறைகளுக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்நாட்டின் நீண்ட கால அரசியற் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்துள்ள இசுலாமிய மக்கள் தமக்கெதிரான ஒடுக்குமுறைகளுக்கெதிராக போராடாமை துர்ப்பாக்கியமே. இதற்கு இசுலாமிய தலைமைகளின் முதலாளித்துவ வர்க்க தாபனமே பெரிதும் காரணமாகும். அத்துடன் நாடாளுமன்றத் தமிழ் தலைமைகளும்—இசுலாமிய தலைமைகளின் சந்தர்ப்பவாதப் போக்கைச் சாதகமாகக் கொண்டு இசுலாமிய சமூகத்தையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புறக்கணித்து அரசியல் நடத்தி வந்துள்ளார்கள். இசுலாமிய மக்களை அவர்களது சொந்தச்சிக்கலுக்கூடாக அணிதிரட்டாததும் குறிப்பிடத்தக்கது. இதனால் சிங்கள இனவாத அரசிற்கு எதிரான போராட்டத்தில் தமிழ் இசுலாமியர் நல்லுறவு கடந்த காலங்களில் முறையாக முன்னெடுக்க முடியாமற் போயிற்று. அத்துடன் இசுலாமிய மக்கள் தொகையில் 60% தமிழீழ நாட்டுக்கு அப்பால் வாழுகின்ற நடைமுறைச் சூழ்நிலை காரணமாகத் தமிழ் மக்களின் போராட்டத்துடன் இசுலாமிய மக்கள் தம்மை இணைக்கத் தயங்குகின்றார்கள்.

எனினும் இன்று தமிழ், இசுலாமிய மக்கள் மத்தியில் ஏற்படும் புதிய தலைமைகள், சிங்கள இனவாத அரசுக்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டம் அவசியம் என்பதனை தெளிவாக உணர்த்தி வருகின்றனர்.

**இசுலாமிய மக்கள் குறித்து எமது நிலைப்பாடானது.**

(1) இசுலாமிய மக்கள் இந்நாட்டின் எப்பகுதியிலும் சிங்கள இனவாத அரசுக்கெதிராக தமது தனித்துவத்தையும், விடுதலை உரிமையையும் நிலைநாட்ட நடத்தும் எவ்வகைப் போராட்டத்திற்கும் நாம் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம்.

(2) சிறிலங்காவில் வாழும் இசுலாமிய மக்கள் சிங்கள இனவாத அரசின் அடக்கு முறையில் இருந்து தம்மைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு நாம் முழுமையாக உதவுவோம்.

(3) சிறிலங்காவில் வாழும் இசுலாமிய மக்கள் சிங்கள இனவாத அரசுக்கு எதிராக சிறிலங்காவின் முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து, அங்கு ஒரு சமூகவுடைமைப் புரட்சியை ஏற்படுத்துவதில் பின்நிற்கக்கூடாது. இசுலாமியர்களின் தனித்துவமான போராட்டங்கள் அவர்களை சிறிலங்காவின் முற்போக்குப் போராட்டங்களில் இருந்து தனிமைப்படுத்தும்



நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது. எனவே முற்போக்கு ஆற்றல்களை சிறிலங்காவில் இனங்கண்டு அவர்களுடன் இணைந்து போராட முன்வரல் வேண்டும்.

(4) தமிழீழத்தில் வாழும் இசுலாமிய மக்கள் தமிழீழப் போராட்டத்தில் இணைந்து போராடவேண்டும். இசுலாமிய மக்களின் தனித்துவம், அவர்களது மதவழிபாட்டுக் கலாச்சார உரிமைகள் யாவும் தமிழீழத்தில் பாதுகாக்கப்படுவதோடு தமிழீழத்தில் எத்தகைய பாகுபாட்டிற்கோ அல்லது ஏற்றத்தாழ்வுகட்கோ எந்த மக்களும் உட்படுத்தப்படமாட்டார்கள்.

(5) தமிழீழத்திலுள்ள இசுலாமிய மக்கள் சிறிலங்கா இசுலாமிய மக்களுடனான தமது தொடர்புகளையும், உறவுகளையும், வளர்க்க உரிமை உடையவர்களாவார்கள்.

(6) சிறிலங்காவில் பரந்துபட்டு வாழும் இசுலாமிய மக்கள் தங்கள் பாதுகாப்புக் கருதி சிறிலங்காவிலோ, அல்லது தமிழீழத்திலோ இசுலாமிய மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் குடியேற வேண்டுகின்றோம். இம்மக்களின் உயிர், உடமைக்காப்பிற்கு இது அவசியமாகும். தமிழீழத்தில் இவ்வாறான குடியேற்றங்களுக்கு புத்தளம், அம்பாறை, போன்றவை தகுந்த பகுதிகளாக நாம் கருதுகின்றோம்.

## மலையகத் தமிழ் மக்கள்

இந்நாட்டில் ஐந்து தலைமுறைகளுக்கு மேல் வாழ்ந்த இம்மக்களின் தாயகம் எக்காரணத்தைக்கொண்டும் இந்தியாவாக இருக்கமுடியாது. இந்நாட்டின் வளத்துக்காக உழைத்த இம்மக்களே சிறிலங்கா சிங்கள இனவாத அரசின் இன ஒடுக்கங்களுக்குள்ளாகி மிக மோசமாகச் சுரண்டப்பட்ட மக்களாவர். இம்மக்கள் இம்மண்ணிலேயே உரிமையும், விடுதலையும் பெற்றவர்களாக வாழ வேண்டும். இவர்கள் பெருந்தோட்டங்களில் வாழும் சூழலும், இந்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஒதுக்கப்பட்ட சமூகமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பதும், இவர்களுக்கு ஒரு தனித்தன்மையை வழங்க வேண்டிய நிலையை நாம் கவனத்தில் கொள்கிறோம்.

இம்மக்கள் இந்நாட்டின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் சமத்துவமும், விடுதலையும் பெற்றவர்களாக இருக்கவேண்டும். கடந்த காலத்தில் ஏற்பட்ட வன்செயல்கள் மலையகத்தின் சில பகுதிகளை இம்மக்களின் பாதுகாப்பற்ற நிலப்பரப்பாக மாற்றியுள்ளன.

**சிறிலங்காவில் வாழும் மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எமது நிலைப்பாடு**

**(1)** மலையகத்தில் வாழும் தமிழ்மக்கள் தம் பாதுகாப்புக்கருதி தத்தம் பாதுகாப்புக் குழுக்களை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். மலையக மக்கள் தம் உயிர், உடமை பாதுகாப்புக்கு மட்டுமல்ல பொருளாதார, அரசியல், சமூக விடுதலை கருதியும் தனியான அமைப்புகளை ஏற்படுத்திப் போராடவேண்டும். மலையக மக்களின் பாதுகாப்புக் குழுக்களுக்கு தேவையான படைத்துறை ஆலோசனைகளையும், பயிற்சிகளையும், கருவிகளையும் வழங்க நாம் தயாராக இருக்கின்றோம்.

**(2)** மலையக மக்கள் தம்உயிர்ப் பாதுகாப்புக்கருதி மலையகத்தின் பாதுகாப்பற்ற பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளிலோ அல்லது தமிழீழப்பகுதிகளிலோ குடியேற வேண்டும்.

**(3)** மலையத் தமிழ் மக்கள் சிங்கள இனவாத அரசின் இன ஒதுக்கலுக்கும் சுரண்டலுக்குமெதிராக நடத்தும் போராட்டங்களுடன் நாம் இணைந்து போராடுவோம்.

**(4)** சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசிற்கு எதிராக சிறிலங்கா நிலப்பரப்புக்குட்பட்ட மலையகத்தமிழர்களும், சிங்கள மக்களும் இணைந்து, சுரண்டலில் இருந்தும் ஒடுக்குமுறையில் இருந்தும் தம்மை விடுவித்துக்கொள்ள முற்போக்கான, அமைப்பு ரீதியான போராட்டங்களை முன்னெடுக்க



வேண்டும். இப்போராட்டங்களுக்கு நாம் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம்.

(5) தமிழீழத்தில் குடியேறும் மலையக மக்கள் சமத்துவமும், விடுதலையும் பெற்றவர்களாக வாழ உரிமையுடையவர்கள். எந்நிலையிலும் மலையக மக்கள் தமிழீழத்தில் ஏற்றத்தாழ்வு கட்குட்படுத்தப்படமாட்டார்கள்.

(6) தமிழீழத்தில் குடியேறும் மலையகத் தமிழ் மக்கள் தமிழீழப் போராட்டத்தில் இரண்டறக்கலந்து போராட வேண்டும். தமிழீழப் போராட்டத்தினை முன்னெடுப்பதினாலேயே இவர்களின் வளமான வாழ்வுக்கு வழிகாண முடியும்.

## பெண்ணடிமைத்தனம்

மொத்த மக்கள்தொகையில் அரைப்பங்கினர் பெண்கள். இவர்கள் எமது சமூகத்தில் மிக மோசமான சுரண்டலுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய ஒடுக்குமுறைகட்கும், சுரண்டலுக்கும், நிலபிரபுத்துவ சமூக அமைப்பின் எண்ணப்பாடுகளும் தனிச்சொத்துடமையும் காரணமாகும். நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் எண்ணப்பாடுகளை நீக்குவதற்கு தனிச்சொத்துடமை மாற்றத்தின் ஊடாக சமூக அமைப்பின் மாற்றத்துக்கான கலாச்சாரப்புரட்சியை நடத்துவதன் மூலம் முழுமையான விடுதலையைப் பெறமுடியும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஊடாகவே பெண் விடுதலையை வென்றெடுக்க முடியும். எனவே இப்போராட்டத்திற்குப் பெண்கள் தம்மை முதன்மைப்படுத்தி தங்களது பங்களிப்புக்களை நல்கவேண்டும்.

## தீண்டாமை

எமது சமூகத்தில் நிலவும் நிலவுடமையையும், உற்பத்தி உடமையையும் அடிப்படையாகக்கொண்ட பொருளாதார

www.tamilarangam.net



உறவுகளும், அதன் பின்னணியாக எழும் கருத்துக்களும் கலாச்சாரப்பண்பாட்டுக்காரணிகளுமே இன்றய சாதியமைப்புக்கும் அடிமை, குடிமை, கொடுமைகளுக்கும் காரணமாகும்.

கடந்தகாலத் தமிழ் தலைமைகள் தமது தலைமையை நிலை நாட்டிக்கொள்ள தேவைப்பட்ட போதெல்லாம் சாதிப் பூசல்களை பயன்படுத்தி வந்தது கவனிக்கத்தக்கது.

கடந்த காலங்களில் இவர்கள் சாதிப்பாகுபாட்டைத் தீர்க்க எடுத்த நடவடிக்கைகள் கூட சாதியமைப்பின் அடிப்படைகளைத் தகர்க்காமல், வெறும் சீர்திருத்த நடவடிக்கைகளாகவே காணப்பட்டன. இது முற்றிலும் நாடாளுமன்ற நாற்காலிகளை கைப்பற்றும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையே.

இந்த அம்சங்கள் தமிழீழப் போராட்டம் பற்றியும், அமையப்போகும் தமிழீழம் பற்றியும் ஐயப்பாட்டை இந்த மக்களுக்கு எழுப்பியுள்ளமை நியாயமானதே. சமுதாயத்தின் பொருளாதார அமைப்பை மாற்றியமைப்பதும், அதனூடாக ஏற்படும் கலாச்சாரப் புரட்சியுமே இந்தக் கொடுமைகளை முற்றுகத்துடைத்தெறியும் வல்லமை பொருந்தியதாகும்.

இதனை நாம் விடுதலை பெற்ற தமிழீழத்தை அமைப்பதன் மூலம் நடைமுறைப்படுத்துவோம். புரட்சிகர அமைப்பின் தலைமையில் விஞ்ஞான சமுகவுடமைச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு புரட்சிகர அமைப்பின் தலைமையில் அணிதிரண்டு தமிழீழத்தை வென்றெடுப்பதின் மூலமே இந்த முரண்பாடுகளையும், சாதிப் பாகுபாடுகளையும் பேரினவாத வர்க்க ஒடுக்குமுறைகளையும் தகர்த்தெறிய முடியும்.



## கட்சி

இயக்கத்தில் பல்வேறுபட்ட அமைப்புக்களில் இருந்தும் உழைக்கும் மக்களின் தலைமையிலான விடுதலையைப்பெற நடைமுறையில் வேலைசெய்யும், மக்களை அணிதிரட்டி போராட்டத்தை முன்னெடுக்கும் தகுதிபெற்ற அரசியற் தெளிவு பெற்ற திரட்சியே கட்சி அமைப்பாகும்.

இதுவே எமது விடுதலைப் போராட்டத்தில் எம்மை நெறிப்படுத்தி வழிநடத்தும் தலைமையாகும். பரந்துபட்ட மக்களை அரசியல் மயப்படுத்தவும், அவர்களை அமைப்பு ரீதியில் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கவும், செயற்படும் கழகத்தின் அமைப்புக்கள்; மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு, விவசாயிகள், தொழிலாளர்கள் அமைப்பு, கலை கலாச்சார அமைப்பு, படைத்துறை, ஆகியன கட்சியின் நேரடி வழி காட்டலிலேயே நமது ஒன்றுபட்ட செயற்பாடுகளையும், வலிந்த தாக்கத்தையும் நிகழ்த்த முடியும்.

புரட்சிகரமான கழகத்தின் நடவடிக்கைகளை நெறிப்படுத்தல், வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செயற்படுத்தல், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற உணர்வு ஏற்படுத்தும் வகையில் மக்களுக்கும் தோழர்களுக்கும் போதனை செய்தல், படையமைப்புக்களைக்கட்டியமைத்து போராட்டத்திற்கு வழி காட்டுதல், ஏனைய விடுதலை இயக்கங்களுடன் உறவுகளை வைத்து பன்னாட்டு சமவுடமை முகாம்களுடனும், ஏனைய முற்போக்கு இயக்கங்களுடனும் உறவுகளை வளர்த்தல் போன்ற பாரிய கடமைகளை கட்சியின் சரியான வழி நடத்துதலினாலேயே செய்ய முடியும். பரந்துபட்ட மக்கள் மத்தியில் கட்டுப்பாடுகளையும், போராட்ட ஒழுங்கு முறைகள் பற்றியும், அமைப்பின் கருத்துக்களையும் சகிப்புத் தன்மையையும் கட்சியானது உருவாக்கும்.

www.tamilarangam.net



இதுபோன்ற உயர்ந்த நோக்கங்களை உருவாக்குவதாயின் கட்சி உறுப்பினர்களிடையே தோழமையுள்ள புரிந்துணர்வும், உணர்வு பூர்வமான கீழ்ப்படிவும், இரும்பு போன்ற கட்டுப்பாடும், உயர்ந்த அரசியல் கண்ணோட்டமும் அவசியமாகும். ஆய்வு-தன்னாய்வு என்ற அடிப்படையில் தவறுகளைக் களைவதும், தொடர்ச்சியான உட்கட்சிப் போராட்டத்தின் ஊடாக ஏனைய கருத்து முரண்பாடுகளைத் தீர்ப்பதும் அவசியமாகும்.

## மக்கள் படை

கழகத்தின் நோக்கங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றும் பொருட்டுள்ள பல்வேறுபட்ட அமைப்புகளில் மக்கள் படை ஒரு பிரிவாகும். ஏனைய முதலாளித்துவ கூலிப் படைகளைப் போல் அல்லாமல் எம் மக்கள் படை பல்வேறுபட்ட கடமைகளைக் கொண்டுள்ளது,

முதலாளித்துவ, பாசிச, வர்க்க அடக்குமுறைகளில் இருந்தும் மக்களை மீட்டெடுத்து பெற்ற வெற்றியைப் பேணிக்காத்தல், இயற்கையின் மூலவளங்களை மீட்டெடுத்து மக்கள் பயனுறும் வகையில் வழி வகுத்தல். கடந்த கால நிலவுடமைத் தப்பெண்ணங்களில் இருந்தும், கலாச்சார ஒடுக்குமுறைகளில் இருந்தும் மக்களை மீட்டெடுத்தல் போன்றவை குறிப்பிடத்தக்க சிலவாகும்.

இதுபோன்ற வரலாற்றுப் பணிகளைச் செய்து முடிப்பதாயின் உறுதியான கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதுடன் படைத்துறை, அரசியல், பண்பாடு மட்டங்களில் உயர்ந்த நிலையில் பேணப்படுவது அவசியமாகின்றது. மக்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும், மக்களுக்குத் தொண்டு செய்யவும் உள்ள மனோபாவத்தைக் கொண்டிருத்தல் அவசியமாகின்றது.

## மக்கள் சனநாயகக்குடியரசு

நாம் காணவிழையும் தமிழீழ மக்கள் சனநாயகக் குடியரசானது அனைத்து அடக்கு முறைகளையும், ஒடுக்கு முறை



களையும் எதிர்த்துப் போராடும் இறைமையுள்ள அமைப்பாக விளங்கும். தமிழீழ மக்களின் முக்கிய தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும். ஒவ்வொரு மனிதனதும் திறமைக்கேற்ப வேலையும், உழைப்புக்கேற்ற ஊதியமும் வழங்கப்படுவதற்கான அடித்தளம் உருவாக்கப் பெறும். எதிர்காலம் குறித்தோ, எதிர்கால வம்சம் குறித்தோ, தமிழீழ மக்கள் ஐயுறவு கொள்ளாத வகையில் வாழ்க்கை சீரமைக்கப்படும். சாதி, மதம், சமூக, கலாச்சார அடிப்படையில் எந்தவித ஏற்றத்தாழ்வுகட்கும் இடம் கொடுக்கப்படமாட்டாது. குழந்தைகள், முதியோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோர் சமூகத்திற்கும் பாரமானவர்கள் என்று ஒதுக்கப்படாமல் அவர்களின் இயல்புக்கேற்ப சமூக முன்னேற்றத்தில் பங்குபெற வாய்ப்பும் சலுகையும் வழங்கப்பெறும்.

தமிழீழத்திலுள்ள மூலவளங்கள் அனைத்தும் பயன்படும் வகையில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பெறும். கிராமியக் குடிசைக் கைத்தொழில்கள், கூட்டுறவு முறையில் உற்பத்தி என்பன ஊக்குவிக்கப்பெறும் பயிர்ச் செய்கையில் விஞ்ஞான தொழில் நுட்பங்கள் எமது நாட்டுச் சூழ்நிலைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப மாற்றியமைக்கப்பெறும். மேலாதிக்க நாடுகளின் வளர்ச்சிக்கேற்ப எமது நாட்டுப் பொருளாதாரம் இருக்கும் நிலை முற்றாக மாற்றியமைக்கப் பெறும். வேளாண்மை, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில், என்பன எமது நாட்டின் முக்கிய பொருளாதார ஊற்றுக்களாக மாற்றம் காணும்.

## விடுதலை இயக்கங்களின் ஒற்றுமையும் போராட்டமும்

இன்றைய காலகட்டத்தில் அனைத்து இயக்கங்களையும் ஒற்றுமைப்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது அவசியமாகும். இவ்வொற்றுமை சந்தர்ப்பவாதப் போக்கிலோ, அல்லது சரணாகதி நோக்கிலோ அல்லாமல் எமது கொள்கையை முன்னெடுப்பதற்கு ஆதாரமாக இருக்கும் வகையில் ஏற்பட வேண்டும் என்பதில் குறியாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கின்றோம். தமிழீழப் போராட்டத்தை முன்னெடுக்கும் முற்போக்கான சனநாயக சக்திகளுடன் நாம் ஒன்றிணையத் தயாராகவுள்ளோம். கருத்து முரண்பட்ட ஏனைய அமைப்புக்களுக்கும் தமிழீழ போராட்டத்தை முன்னெடுக்கும் உரிமை உண்டென்பதை வலியுறுத்துகின்றோம். அதே சமயம் முரண்பட்ட கருத்துள்ள அமைப்புக்களை கருவிமுனையில் பழிவாங்கும் தவறான பாதையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஏனெனில் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்களின் ஒன்றிணைந்த போராட்டத்திற்கு குந்தகம செய்யும் நடவடிக்கைகளேயாகும். ஒன்றிணைந்த அமைப்புகள் தம்மிடையே ஒருவரை ஒருவர் தங்களுக்குள் திறனாய்வு செய்ய உரிமையுண்டு. இதன் மூலம் போராட்டம்-ஒற்றுமை-போராட்டம் என்ற வகையில் தொடர்ச்சியாக மக்களுக்கே செல்ல இடமுண்டு. இதுவே தமிழீழப் போராட்டத்தை பரந்து பட்ட மக்களின் ஒன்றிணைந்த விடுதலைப் போராட்டமாக முன்னெடுப்பதற்கான தன்மையைக் கொண்டு வரும்.

**''அனைத்து அதிகாரங்களும் மக்களுக்கே''**

———X———

தமிழீழ விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் எமது வெளியீடுகள் :

★ **புதிய பாதை - (திங்கள் இதழ்)**

★ **தமிழீழத்தின் குரல்**

★ **SPARK - (QUARTERLY)**

★ **PLOT - BULLETIN - (MONTHLY)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

PEOPLES LIBERATION ORGANIZATION ★ THAMILEELAM ★

DEMOLISH ALL REPRESSION

P.L.O.T

வெளியீடு :

செய்தி—தொடர்புத் திணைக்களம் 01-01-1985

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்